# பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான குறிப்புகள் தமிழில்

WORKaBOOK®

**Workabooks என்பவை எவை?**
ப்ரைமரி பாடசாலையில் வீட்டுப்பாடத்திற்காக உங்கள் பிள்ளைக்குத் தேவைப்படும் ஒவ்வொன்றையும் Workabooks கொண்டுள்ளன. ஒவ்வொரு Workabookம் ஒரு பாடத்தில் ஒரு வருடத்துக்கான வீட்டுப்பாடத்தைக் கொண்டுள்ளது.

Workabook வீட்டுப்பாடமானது வகுப்பு வேலையின் ஒரு தொடர்ச்சியாகும், மேலும் இது தேசிய பாடத்தொகுப்பின் அடிப்படையாகக் கொண்டது. Workabook வீட்டுப்பாடமானது மூன்று வெவ்வேறு வகையான வீட்டுப்பாட செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டது: கற்கும் அப்பியாசங்கள், பயிற்சி அப்பியாசங்கள், சிந்தனை செய்யும் பணிகள்.

**கற்கும் அப்பியாசங்கள்**
இது இந்த ஆண்டில் உங்கள் பிள்ளை கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களை உள்ளடக்குகின்றது. பெருக்கல் வாய்பாடுகள் மற்றும் சொற் பட்டியல்கள் ஆகியவை மனப்பாடம் செய்யப்படவேண்டியவை அப்பியாசங்களாகும். இவை பற்றிய விரிவான ஒரு குறிப்பை நீல நிற ஓரமுள்ள (எண்ணியலுக்கானது) அல்லது ஓரென்சு நிற ஓரமுள்ள (எழுத்தியலுக்கானது) பக்கங்களில் காணலாம்.

கற்கும் அப்பியாசங்களுக்கு, திரும்பத் திரும்ப செய்தல் முக்கியமானது. அத்துடன், பாடசாலைக்குப் போகும்போதும் அங்கிருந்து வரும்போதும் பெருக்கல் வாய்பாடுகள் போன்ற விடயங்களை நீங்கள் சோதிக்கலாம்.

**பயிற்சி அப்பியாசங்கள்**
பயிற்சி அப்பியாசங்கள், கற்றல் அப்பியாசங்களை ஒன்றிணைப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஓரேன்சு நிற ஓரமுள்ள (எண்ணியலுக்கானது) அல்லது பர்ப்பிள் நிற ஓரமுள்ள (எழுத்தியலுக்கானது) பக்கங்களில் அவற்றைக் காணவும். அவை மூன்று வெவ்வேறு மட்டங்களைக் கொண்டுள்ளன:

- மட்டம் A: ஒரு நல்ல அடிப்படை மட்டத்துக்கானது;
- மட்டம் B: தேசிய எதிர்பார்ப்புகளை ஈடு செய்து அடைவது பற்றியது;
- மட்டம் C: பெரிதும் ஒரு சவால் பற்றியது.

இந்த நெகிழ்ச்சியானது எல்லாப் பிள்ளைகளும் சாதித்துக்கொள்ளவும் முன்னேற்றம் அடையவும் அவர்களுக்கு உதவுகின்றது. வழமையாக, ஆசிரியர் மட்டத்தைத் தெரிவு செய்வார். ஆனால், மேலுள்ள அடுத்த மட்டத்தை உங்கள் பிள்ளை முயற்சிக்க விரும்பினால், அதனைச் செய்ய அவர்களை ஊக்கப்படுத்தவும்!

**சிந்தனை செய்யும் பணிகள்**
அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு எழுத்தியலும் எண்ணியலும் பயன்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்படலாம் என்பதை சிந்தனை செய்யும் (மற்றும் எழுதுதல்) பணிகள் காட்டுகின்றன. இவை பச்சை ஓரத்தை (எண்ணியலுக்கானது) அல்லது சிவப்பு ஓரத்தை (எழுத்தியலுக்கானது) கொண்டவை. அவை கற்றல், மற்றும் பயிற்சி அப்பியாசங்களில் விருத்திசெய்யப்பட்ட திறமைகளைப் பயன்படுத்துகின்றன.

Workabooks பின்வருவனவற்றையும் உள்ளடக்கலாம்:

- ஒரு ***சிறிய அகராதி*** இது வருடத்துக்கான முக்கியச் சொற்களைக் கொண்டது. வருடத்தில் தங்களின் சொந்த வரைவிலக்கணங்களை அமைத்துக்கொள்வதற்கு பிள்ளைகள் இதனைப் பயன்படுத்தலாம்;
- ***சாம்பல்நிறப் பக்கங்கள்*** குறிப்புகள் எடுப்பதற்கு அல்லது ஏனைய விசேஷப் பணிகளை;
- ஓர் ***சாதனை*** பக்கம், பிள்ளைகள் அவர்களின் Workabook ஐ நிறைவுசெய்ய அவர்களை ஊக்கப்படுத்துகிறது;
- எழுத்தியலுக்கு, ஒரு **வாசித்தல் பதிவேடு** இந்தப் பக்கம் வாசிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்டுகிறது;
- எண்ணியலுக்கு, ***மேற்கோள்*** இது கூடுதல் தகவல்களையும் உகவும் ஆவணங்களையும் கொண்டுள்ளது.

**ஆரம்பித்தல்**
வீட்டுப்பாடம் வழமையாக ஒவ்வொரு வாரமும் கொடுக்கப்படும். எந்தப் பணிகளைப் பூர்த்திசெய்யுமாறு அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள் என்பதை உங்களின் பிள்ளை வகுப்பில் தங்களின் Workabook இல் குறித்துக்கொள்வார். தனது வீட்டுப்பாடத்தை உங்கள் பிள்ளை ஆரம்பிக்கும்போது, என்ன செய்யவேண்டும் என அவர்களுக்குத் தெரியும் என சரிபார்த்துக்கொள்ளவும். உங்களின் உதவி இல்லாமல் வீட்டுப்பாடத்தைச் செய்வதற்கு அவர்கள் முயற்சிக்கவேண்டும். ஆனால், அவர்களுக்குத் தேவைப்படும்போது, நீங்கள் அவர்களுக்கு ஆதரவும் உதவியும் அளிக்கலாம்.

அவர்கள் சார்ந்திருப்பதற்கு ஏதாவது ஒன்று உள்ளது என நீங்கள் பார்த்துக்கொள்வதுடன், பென்சிலால் அவர்கள் வேலை செய்கிறார்கள் எனப் பார்த்துக்கொள்ளவும் – அப்படியானால், பிழைகளைத் திருத்திக்கொள்வது இலகுவாகும்!

பாடசாலைக்குச் செல்ல எவ்வளவு நேரம் எடுக்கும் என்பது போன்ற சில சிந்திக்கும் பணிகள் பல நாட்களில் செய்யவேண்டியதொன்றுடன் தொடர்புபட்டாலும், அப்பியாசங்களில் பெரும்பாலானவை ஒரு பாட நேரத்தில் செய்யப்படலாம்.

வீட்டுப்பாடத்திற்கான சரியான சூழலைக் கொடுத்தல் உங்கள் பிள்ளைக்கு அளிக்கும் ஆதரவின் ஒரு முக்கியமான பகுதியாகும். இதில் அடங்குபவை:

***வழமையாகச் செய்தல்***
வழமையாகச் செய்துகொள்ளுதல் முக்கியமாகும். ஆதலால், உதாரணமாக ஒரு வார முடிவிலுள்ள காலை நேரம் போன்ற உங்கள் பிள்ளை அதிகம் களைப்பாக இல்லாத ஒரு ஒழுங்கான நேரத்தைக் கண்டுகொள்ள முயற்சிக்கவும். இது நீங்கள் உடனிருந்து, தேவைப்பட்டால் ஆதரவு கொடுக்கக்கூடிய ஒரு நேரமாக இருக்கவேண்டும்.

© PSHB கம்பெனி லிமிடெட் 2005, 2014

***கவனச் சிதறல்கள்***
உங்கள் பிள்ளை வீட்டுப்பாடம் செய்வதற்கு நியாயமான அளவுக்கு ஒரு அமைதியான இடத்தைக் கண்டுகொள்ள முயற்சிக்கவும். இது நன்கு வெளிச்சமுள்ள, பொருட்கள் அதிகமில்லாத ஒரு இடமாக இருக்கவேண்டும். வீட்டுப்பாடத்தின்போது உங்கள் பிள்ளையின் கவனத்தைச் சிதறச்செய்யாதிருக்க வீட்டிலுள்ள ஏனையோரை ஊக்குவிக்கவும்!

***அடிப்படைத் தேவைகள்***
உங்கள் பிள்ளை தனது வீட்டுப்பாடத்தைச் செய்யும்போது அவர் களைப்பாக, பசியுடன், தாகத்துடன், குளிராக, அல்லது ஆத்திரமாக இல்லை எனப் பார்த்துக்கொள்ளவும். இவை அனைத்தும் கவனம் செலுத்தலையும் கற்றலையும் பாதிக்கலாம்.

உங்களின் பிள்ளை வீட்டுப்பாடத்தை முடித்துக்கொண்டதும், அது செய்யப்பட்டுள்ளது எனக் காட்டுவதற்கு நீங்கள் வீட்டுப்பாடத்தில் கையெழுத்திடவேண்டும். பெற்றோர்/பராமரிப்பாளருக்கான பெட்டியில் கையெழுத்திடவும். பின்னர், பெட்டிகளில் ஒன்றுக்குச் சரிபோடவும்:

- ***உதவியுடன்*** வீட்டுப்பாடம் செய்ய உங்கள் பிள்ளைக்கு உதவி தேவைப்பட்டிருந்தால்;
- ***தனிமையில்*** உங்கள் பிள்ளை தனிமையில் வீட்டுப்பாடம் செய்திருந்தால்;
- ***மனவுறுதியுடன்*** உங்கள் பிள்ளை தனிமையில் வீட்டுப்பாடம் செய்து, மற்றும் மனவுறுதியுடன் வீட்டுப்பாடம் செய்திருந்தால்.

உதாரணமாக, ஒரு கஷ்டத்தை அல்லது ஒரு விஷேட சாதனையைப் பகிர்ந்துகொள்வதற்காக – ஆசிரியருக்கு ஒரு குறிப்பை நீங்கள் எழுதுவதற்கு இடமும் உள்ளது. இறுதியாக, சரியான நாளில் புத்தகம் பாடசாலைக்குத் திரும்பிச் செல்கின்றது எனப் பார்த்துக்கொள்ளவும்.

**நீங்கள் எவ்வாறு உதவ முடியும் – புகழ்ந்து ஊக்குவிக்கவும்**
ஒரு பெற்றோர்/பராமரிப்பாளர் என்ற முறையில் உங்கள் பிள்ளையின் மனவுறுதியைப் பலப்படுத்துவதற்கு பெருமளவு சக்தி உங்களுக்கு உள்ளது– அத்துடன், கற்றலுக்கு மனவுறுதி முக்கியமாகும். ஏற்படுத்தப்பட்ட வீட்டுப்பாடத்தைச் செய்வதற்கு உங்கள் பிள்ளையை ஊக்குவிப்பதன் மூலமாகவும் பின்னர் அவர்கள் அதைச் செய்யும்போது அவர்களுக்கு ஆதரவு அளிப்பதன் மூலமாகவும் நீங்கள் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்த முடியும். விடைகள் எல்லாவற்றையும் நீங்கள் அறியவேண்டியதில்லை – அவர்களின் வேலையில் உங்களுக்கு அக்கறை உண்டு என அவர்களுக்குக் காட்டிக்கொள்வது கூடுதலாக முக்கியமானதாகும்!

வீட்டுப்பாடம் பற்றி உங்களின் பிள்ளைக்குச் சரியாகத் தெரியாவிட்டால், அவர்களுடன் சேர்ந்து பணிகளை வாசித்து பின்வருவன போன்ற 'உதவும்' கேள்விகளைக் கேட்கவும்:

- ***நீங்கள் என்ன செய்கிறீர்கள் என எனக்கு விளக்க முடியுமா?***
- ***நீங்கள் எவ்வாறு இதைச் செய்யப் போகிறீர்கள்?***
- ***என்ன செய்யவேண்டும் என எப்படி உங்களுக்குத் தெரியும்?***
- ***கண்டுகொள்வதற்கு உங்களுக்கு என்ன தேவைப்படுகின்றது?***

இந்த வழியில் நீங்கள் உங்கள் பிள்ளையுடன் வீட்டுப்பாடம் பற்றிக் கலந்துரையாடும்போது, ஒரு 'ஆசிரியர்' என்ற பங்கை அவர்கள் எடுத்து, என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என விளக்கலாம். இதுவே ஒரு முக்கிய கற்றல் அப்பியாசமாக இருக்க முடியும்.

ஆதரவும் புகழும் ஊக்குவிப்பும் தொடர்பாக எப்போதும் தாராளமாக இருக்கவும்! 'நீங்கள் செய்துள்ள முறையை நான் விரும்புகின்றேன்...' என்பது போன்று ஒன்றைக் கூறி, அவர்களின் வீட்டுப்பாடத்தின் ஒரு அத்துடன், உங்களின் பிள்ளை தனது வீட்டுப்பாடத்தைப் பற்றி உண்மையாகப் பெருமைப்படுவதற்கு அவரை எப்போதும் ஊக்குவிக்கவும்.

உங்களுக்கு நேரம் குறைவாக இருந்தால், வீட்டுப்பாடத்திற்கான உதவியும் ஆதரவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான எவராலும் கொடுக்கப்படலாம் – இது ஒரு சகோதரனாக, சகோதரியாக, பாட்டன் பாட்டியாக, அல்லது அயலவராக இருக்கலாம்; அத்துடன், ஒவ்வொரு தடவையும் ஒரே ஆளாக இருக்கவேண்டியதில்லை.

**கல்வியானது வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையில் பகிர்ந்துகொள்ளப்படவேண்டிய ஒரு பொறுப்பாகும். உங்கள் பிள்ளையின் வாழ்வின் இந்த இரு பகுதிகளையும் இணைக்கும் ஒரு பாலமாக வீட்டுப்பாடம் இருக்கலாம். பாடசாலையுடன் கூட்டாக வேலை செய்து உங்கள் பிள்ளைக்கான உண்மையானதொரு மாற்றத்தை நீங்கள் செய்துகொள்ள முடியும்!**

***மேலும் தகவலுக்கு, எமது வலைத்தளத்தைப் பார்வையிடவும்: www.workabook.co.uk***

*மொழிப்பெயர்ப்பு மற்றும் அச்சு: worldaccent.com*

© PSHB கம்பெனி லிமிடெட் 2005, 2014